# 23. கணினி உலகம்

சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

Question 1.
சார்லஸ் பாப்பேஜ் கண்டறிந்த அறிவியல் கருவி ………………………….
அ) தொலைக்காட்சி
ஆ) கணினி
இ) கைப்பேசி
ஈ) மடிக்கணினி
Answer:
ஆ) கணினி

Question 2.
இப்போதெல்லாம் – இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………………………….
அ) இப்போது + எல்லாம்
ஆ) இப்போ + எல்லாம்
இ) இப்போதே + எல்லாம்
ஈ) இப்போ + வெல்லாம்
Answer:
அ) இப்போது + எல்லாம்

Question 3.
நினைவகம் – இச்சொல்லைப் பிரித்து எழுதும் முறை ………………………….
அ) நினை + வகம்
ஆ) நினை + அகம்
இ) நினைவு + வகம்
ஈ) நினைவு + அகம்
Answer:
ஈ) நினைவு + அகம்

Question 4.
மின் + அஞ்சல் – இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ………………………….
அ) மின் அஞ்சல்
ஆ) மின்னஞ்சல்
இ) மின் அஞ்சல்
ஈ) மினஞ்சல்
Answer:
ஆ) மின்னஞ்சல்

Question 5.
பதிவேற்றம் – இச்சொல்லின் பொருள் ……………………………

அ) தகவல் ஆராய்தல்
ஆ) தகவல் வரிசைப்படுத்துதல்
இ) தகவல் பதிவு செய்தல்
ஈ) தகவல் பெறுதல்

Answer:
ஈ) தகவல் பெறுதல்

**வினாக்களுக்கு விடையளிக்க:**

1. கணினியின் முதன்மைப் பகுதிகளை எழுதுக.

Answer:
கணினியின் முதன்மைப் பகுதிகள் :

1. மையச் செயல்பாட்டுப்பகுதி (CPU)
2. கட்டுப்பாட்டகம் (Control Unit)
3. நினைவகம் (Memory)
4. உள்ளீடு மற்றும் வெளியீடு (Input and output)

2. இணையம் என்றால் என்ன?

Answer:
கணினிகளின் தொடர்ச்சியான வலை அமைப்புகள் சேர்ந்திருக்கும் இணைப்பே வலைத்தளம் அல்லது இணையம் எனப்படுகிறது.

3. மின்னஞ்சல் எதற்குப் பயன்படுகிறது?

Answer:
கணினிகளுக்கு இடையே இணையத்தின் வாயிலாகச் செய்யப்படும் தகவல் பரிமாற்றமே மின்னஞ்சல். இது தகவல்களைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படுகிறது.